பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 17 வியாழக்கிழமை 30.01.2025 கதிர் 083

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இன்று விரிவுரைகள் வழமைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர் சங்கத்தின் கூட்டம் காலை 9 ☞ 2

# மக்களிடம் விடைபெற்றார் தலைவர் மாவை சேனாதி

## நேற்றிரவு அவரது இறுதி மூச்சு பிரிந்தது



தமிழ் இனத்தின் விடுதலைக்காக நீண்ட காலமாக அறவழியில்அயராதுபோராடி வந்த மாவை சேனாதிராசா தனது 82ஆவது வயதில் நேற்றிரவு மக்களிடமிருந்து விடைபெற்றார் என்பதை கனத்தமனதுடன்அறிவிக்கும் துயரம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரான அவர், போருக்குப் பின்னரான தமிழர்களின் நெருக்கடி மிக்க அரசியல் களத்தில் 10 வருடங்களாக தமிழ் அரசுக் ☞ 2

# அருச்சுனா எம்.பி. பிணையில் விடுவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அருச்சுனா ராமநாதன் அநுராதபுரம் சிறப்பு காவல்குழுவினால் நேற்றுப்பிற்பகல்கைது செய்யப்பட்டு நேற்று இரவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் நீதவான் நீதிமன்றம் அவரை தலா 200,000 ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுவித்தது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இந்த வழக்கு பெப்ரவரி 3 மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.

போக்குவரத்துப் பொலிஸாரின் ☞ 8

# தேங்காய் பொருள்கள் விரைவில் இறக்குமதி

மறு ஏற்றுமதி நோக்கங்களுக்காக மட்டுமே 200 மில்லியன் தேங்காய்களுக்குச் சமமான தேங்காய் பால், மாவு மற்றும் குளிர்ந்த தேங்காய் சொட்டுகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதிசெய்வதுதொடர்பாகஎழுந்துள்ள பிரச்சினை குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் அமைச்சு இதை தெளிவுபடுத்தியுள்ளது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்புஅமைச்சின்செயலாளரும், கைத்தொழில் அமைச்சின் ☞ 8

# பதவி விலகிய கலைப் பீடாதிபதி ரகுராம் மானிய ஆணைக்குழு கூட்டத்தில் எப்படி?

## பேரவைக் கூட்டத்தில் வெடித்தது சர்ச்சை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையை முன்வைத்து பல்கலைக்கழகப் பேரவை எடுத்த தீர்மானத்தைஎதிர்த்துப்பதவிவிலகினார் என்று அறிவித்த கலைப் பீடாதிபதி ரகுராம்அதன்பின்னர்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒரு துறைசார் கூட்டத்தில் எப்படிக் கலந்–துகொண்டார் என்று நேற்று யாழ். பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் சர்ச்சை வெடித்தது.

கலைப்பீடாதிபதி ரகுராமின் பதவி விலகல் அறிவிப்பினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த சில நாட்களாக பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அவர் தனது பதவிக்குத் திரும்புவதற்கான சூழல் மாணவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையை அமுல்படுத்துவதன் மூலம்ஏற்படுத்தப்படவேண்டும்என்ற கோரிக்கைவலியுறுத்திபல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விரிவுரைப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தது. இதையடுத்து நேற்று அவசரமாக அழைக்கப்பட்ட ☞ 8

# எல்லை தாண்டி மீன்பிடிக்கும்

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுக்கள் தற்போதும் நடக்கின்றன

## அயலுறவுத்துறை அமைச்சு செயலர் தகவல்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வொன்று கிடையாது. தீர்வை நோக்கிய பேச்சு தற்போதும் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய இராஜதந்திர மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் நிலுக கதுருகமுவ தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் காயமடைந்தமை தொடர்பில் விளக்கமளிப்பதற்காக பத்தரமுல்லையிலுள்ளபாதுகாப்பு அமைச்சில் புதன்கிழமை (29) செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை ☞ 2

# பாதுகாப்பு பிரதானி பதவியில் எவருக்கும் நியமனமில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

பாதுகாப்புபடைகளின்பதவிநிலைப் பிரதானி பதவிக்கு ஒரு நியமனத்தை வழங்கஎதிர்பார்க்கவில்லை. அந்தபணி தொடர்பான பொறுப்புக்களை ☞ 8

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகையை தடுக்கமுடியாது

## ஐ.தே.க. தவிசாளர் தெரிவிப்பு

அரசமைப்பின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும்உரிமைகளை இரத்துச்செய்யவோ குறைக்கவோ முடியாது. அதனால்செய்யமுடியாத விடயங்களை ஆளும்தரப்பு வெளியில்தெரிவிக்காமல்இருப்பது நல்லது என ஐக்கிய தேசிய ☞ 2

## ஜனாதிபதியின் யாழ். வருகையையொட்டி

# போராட்டங்களுக்கு தடை விதிக்கக்கோரி பொலிஸார் நீதிமன்றில் மனுத் தாக்கல்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாண வருகையின்போது போராட்டம் நடத்துவதற்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார ☞ 8

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த கனடா எதிர்க்கட்சி தலைவர் பெய்லிவ் தயார்

## பிரதமராகத் தான் வென்றால் செய்வேன் என்கிறார்

அடுத்த தேர்தலில் தான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தரப்பினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுச் செல்வதற்கு அவசியமான தலைமைத்துவத்தை வழங்கத் தயாராகவிருப்பதாக கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர்பியெர்பொய்லிவ்தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கனடாவின் டொரன்டோ நகரில் 'ஹார்வெஸ்ட் ஓஃப் ஹோப்' எனும் மகுடத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தநிகழ்வில்கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பியெர் பொய்லிவ் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை அரசைத் தனிமைப்படுத்தி தண்டிக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் புறக்கணித்தமையினை நினைவுகூர்ந்த பியெர் பொய்லிவ், கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆற்றிய பங்களிப்பினை பெரிதும் பாராட்டினார்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் ☞ 2

# மதுச்சாலை அரசியல் லஞ்சத்தில் ஆளும்தரப்பும் கூட்டுக்களவாணி

## சுமந்திரன் குற்றச்சாட்டு

மதுச்சாலைகளுக்கான அனுமதிகள் ரணில் விக்கிரமசிங்கவால்வழங்கப்பட்டபோது அதனை அரசியல் லஞ்சம் என்று கூறிய தற்போதைய ஆளும்தரப்பினர், எப்படி அந்த அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டது என்பதை வெளியிட மறுக்கின்றனர். இதன் மூலம் அவர்களும் இந்த விடயத்தில் கூட்டுக் களவாணிகள்தான் என்பது வெளிப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டினார் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.

யாழ். மாவட்டம் வடமராட்சியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மதுபானம்உள்ளிட்டபோதைப்பொருள் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மணிக்கு அழைக்கப்பட்டுள்ளது. அதில் தமது விரிவுரைப் புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிடுவது தொடர்பான அறிவிப்பு விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விரிவுரையாளர்களின் புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக வெளிமாவட்ட மாணவர்கள் பலரும் தமது வீடுகளுக்குத் திரும்பியிருப்பதன் காரணமாக இன்று காலை 8 மணி முதல் 'சூம்' மூலம் விரிவுரைகளை மேற்கொள்ளும்படி பீடாதிபதிகளால் நேற்று இரவு விரிவுரையாளர்களுக்கான புலனக் குழுக்களில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது.

தமது போராட்டத்தை நிறுத்துவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று நள்ளிரவு வரை உத்தியோகபூர்வமாக அறிவிக்காதபோதும், இன்று எப்படியும் அந்த முடிவு எடுக்கப்படும் என்கிற எதிர்பார்ப்பில் விரிவுரைகளுக்குத் திரும்பும்படி விரிவுரையாளர்களைப் பீடாதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர். கலைப்பீடாதிபதி ரகுராம் பதவி விலகியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் நிலவிய குழப்ப நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் துணைவேந்தரிடம் முன்வைத்த கோரிக்கைகள் அவரால் ஏற்கப்பட்டு, அவர் எடுத்த முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், தமது போராட்டம் வெற்றிபெற்றதாகக் கருதும் ஆசிரியர் சங்கம் இன்று காலையில் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் தான் பதவி விலகுகிறார் என்ற அறிவிப்பை கலைப்பீடாதிபதி ரகுராமும் நேற்றிரவு வரை திரும்பப் பெறவில்லை. நேற்றைய பேரவைக் கூட்டத்திலும் அது பற்றிய தகவல்கள் எவையும் பகிரப்படவில்லை. ஆசிரியர் சங்கம் அவரை முன்வைத்து வலியுறுத்திய கோரிக்கை ஏற்கப்பட்டதனால் அவரும் இன்று தனது பணிக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் போதைக்கு எதிராக அவரும் கலைப்பீட மாணவர் ஒன்றியமும் முன்னெடுக்கப்போவதாக அறிவித்த போராட்டம் குறித்து அவர் இன்று ஏதாவது அறிவிப்பாரா என்பதையும் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இதற்கிடையில் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பாக, அரசியல் நியமனம் மூலம் பேரவை உறுப்பினர்களாகிய வெளிவாரி உறுப்பினர்களுக்கும் கல்விசார் சமூகம் சார்பில் நியமனம் பெறும் உள்வாரி உறுப்பினர்களுக்கும் இடையில் காரசாரமான, கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது. இதற்கு முந்தைய கூட்டத்தில் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையாக அவர்களுக்கு எச்சரிக்கையை மட்டும் வழங்குவது என்ற முடிவை எடுக்கும்போது உள்வாரிப் பிரதிநிதிகள் எதுவும் பேசாமல் இருந்துவிட்டு, பின்னர் ஆசிரியர் சங்கமாக அறிக்கை விட்டது தொடர்பிலும் வெளிவாரி உறுப்பினர்கள் உடனடியாகப் பதவி விலக்கப்படவேண்டும் என்று ஆசிரியர் சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பிலும் வெளிவாரி உறுப்பினர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால், அவை தொடர்பில் ஆசிரியர் சங்கத்திடம்தான் கேட்கப்படவேண்டுமே தவிர பேரவைக் கூட்டம் அது தொடர்பில் விவாதிப்பதற்குப் பொருத்தமான இடமல்ல என்று கூறி ஒருவாறு இந்தப் பிரச்சினை சமாளிக்கப்பட்டது.

இதற்கிடையில், இந்தப் பிரச்சினையில் மாணவர்களுக்கு எதிராக போதைப் பொருளைப் புகுத்தி, பிரச்சினையைத் திசைமாற்றி திருபுபடுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்குள் இந்த விவகாரத்தால் இப்போது பிளவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தற்போதைய தலைவரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் செயலாளர் மற்றும் இளம்பொருளாளர் பதவிகளில் இருந்து மாணவர்கள் இருவர் விலகியுள்ளனர். இது குறித்து அவர்கள் துணைவேந்தருக்கு அறிவித்துள்ளனர்.

"மாணவர்கள் மீதான பழிவாங்குதல்கள் மற்றும் கற்றல் உரிமைகளுக்காக உண்ணாவிரதப் போராட்டம் மாணவர்களினால் சனநாயக வழியில் நடத்தப்பட்டது. எனினும் அந்தப் போராட்டத்தினை திசைதிருப்பும் வகையிலும் திரிபுபடுத்தும் வகையிலும் அதற்கு யாழ்ப்பாணப் பல்கைகைக்கழக மாணவர்கள் போதைப் பொருள் பயன்படுத்துகிறார்கள் எனும் பொய்யான செய்தி, ஒரு சிலரின் தன்னிச்சையான செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் கருத்தாகச் சித்தரித்து ஊடகச் சந்திப்புக்களில் பரப்பப்பட்டு வருகின்றது. எமது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகத்தின் மாண்பு என்பவற்றிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயல்களையும் முற்றாக மறுக்கின்றோம். கலைப்பீடத்தின் அனைத்து அணி மாணவர்களும் தமது முழுமையான எதிர்ப்பினையும் கண்டனங்களையும் இச்செயல்களிற்குத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் மற்றும் இளம்பொருளாளர் பொறுப்புக்களிலிருந்து கூட்டாக விலகி நாங்களும் எமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்" என்றுள்ளது.

எந்தவித அடிப்படைகளுமற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகப் பொய்யான செய்திகளைப் பரப்பும் நபர்களின் மீது உடனடி மற்றும் விரைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் இருவரும் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு மேலாக பல்கலைக்கழக மாணவன் ஒருவன் தான் பலவந்தப்படுத்தப்பட்டு இந்த விவகாரத்தில் பயன்படுத்தப்பட்டதாக துணைவேந்தருக்கு ஒப்புதல் வாக்குமூலக் கடிதம் ஒன்றை அனுப்பியது தொடர்பான விவரங்களை நாளை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மக்களிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்குத் தலைமை வகித்தவர். பெருந் தலைவர் சம்பந்தனின் பின்னர் கட்சியை வழிநடத்தும் பெரும் பொறுப்பைச் சுமந்தவர். கட்சிக்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர். அவரது இழப்பு தமிழ் இனத்திற்கும் கட்சிக்கும் ஈடு இணையற்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக 10 வருடங்கள் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்த மாவை சேனாதிராசா கடந்த சில மாதங்களாகவே உடல்நலக் குறைவு காரணமாகத் தளர்ந்திருந்தார். அப்போதும் அவர் கட்சிப் பணிகளில் தீவிரம் காட்டிவந்தார். திங்கட்கிழமை அவரது வீட்டில் மயங்கி விழுந்த அவரை உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவரது மூளைக்குள் பெரும் குருதிக் கசிவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் 'கோமா' நிலைக்குச் சென்றிருந்தார். அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டு தீவிர கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்தார். தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டுவந்தது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்ற தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் மாவையை சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் குறித்து வைத்தியசாலையின் பணிப்பாளருடன் ஆராய்ந்தார். எனினும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டால் மட்டுமே அவரை இடம்மாற்ற முடியும் என்று வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றிரவு 10 மணியளவில் மாவை சேனாதிராசா தமிழ் மக்களிடமிருந்து விடைபெற்றார். அவரது இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காந்தியவாதியான மாவை சேனாதிராசாவின் மறைவிற்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்பதற்கான இயலுமைய தமக்கிருப்பதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற எயா வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு படைகளின் பதவிநிலைப் பிரதானி பதவியைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த பணி தொடர்பான பொறுப்புக்களை பாதுகாப்பு

## மதுச்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாவனை மூலமாக சமூகச் சீரழிவை ஏற்படுத்துவது தொடர்பில் நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். இது தொடர்பில் பலவிதமான வேலைத்திட்டங்களைப் பல காலமாகச் செய்து வருகின்றோம்.

ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது அரசியல் லஞ்சம் என்று இன்றைய ஆளும்தரப்பினர் தெரிவித்தனர். அப்படி அரசியல் லஞ்சம் பெற்றவர்களை தாம் ஆட்சிக்கு வந்ததும் அம்பலப்படுத்துவோம் என்றனர். ஆனால், இதுவரையில் அவர்கள் அதனைச் செய்யவில்லை. யார் யாருக்கு மதுபான சாலை அனுமதிகள் வழங்கப்பட்டன என்பதை மட்டுமே அவர்கள் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளனர். அதை அவர்கள் சொல்லத் தேவையில்லை. மதுச்சாலைகளின் முன்பாக நின்று நிமிர்ந்து பார்த்தால் அதன் பெயர்ப் பலகைகளில் இருந்தே அதனைத் தெரிந்துகொள்ள முடியும்.

மதுச்சாலை அனுமதி ஓர் அரசியல் லஞ்சம் என்றால், அந்த லஞ்சத்தைப் பெற்றவர்கள், அல்லது அதன் மூலம் லாபமடைந்தவர்கள் யார் என்பதை ஆளும்தரப்பினர் அம்பலப்படுத்தவேண்டும். அப்படிச் செய்யாமல் இருப்பது இன்றைய ஆட்சியாளர்களும் அதில் கூட்டுக்களவாணிகள் என்பதைத்தான் காட்டுகின்றது.

அரசியல் இலஞ்சமாக சமூக விரோத செயற்பாட்டுடன் தொடர்புடைய மதுபான சாலைகள் வழங்கப்பட்டமை பிரதான விடயமாகப் பார்க்கப்படவேண்டும். அதில் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் சிலர் தாமாகவே தேர்தல் அரசியலிலிருந்து விலகினார்கள். ஆனால், பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்கள். ஆகவே இது தொடர்பாக மக்கள் தமது கரிசனையைச் செலுத்தவேண்டும். அரசியல் இலஞ்சம் பெறுகின்றவர்கள் கட்டாயம் எமது இனத்தைக் காட்டிக்கொடுப்பார்கள். அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

தங்களுடைய சொந்த நலன்களுக்காகச் சொத்துக்களைக் குவிப்பதற்காகப் பலர் இவ்வாறு செயற்படுகின்றார்கள். அவர்களை அடையாளம் கண்டு மக்கள் சரியான விதத்தில் செயற்படவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை என்றார்.

## இலங்கையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்த ராஜபக்சக்களையும், ஏனைய குற்றவாளிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவசியமான தலைமைத்துவத்தை கொன்சவேட்டிவ் கட்சியின் பிரதமரான நான் வழங்குவேன் எனவும் பியெர் பொய்லிவ் உறுதியளித்தார்.

## எல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து நீண்ட காலமாக அதிகாரிகள் மட்டத்திலிருந்து அரச தலைவர்கள் மட்டம் வரை இந்தியாவுடன் மிக ஆழமான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவை தவிர இரு நாட்டு கடற்றொழில் அமைச்சுக்களின் செயலாளர்களால் தலைமைத்துவம் வகிக்கப்படும் ஒன்றித்த செயற்குழுவும் காணப்படுகிறது.

2015ஆம் ஆண்டு இக்குழு நியமிக்கப்பட்டது. இதுவரை 6 சந்தர்ப்பங்களில் இந்த குழு கூடியுள்ளது. கடந்த ஒக்டோபர் 29 கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் இவ்வாறான சகல விடயங்கள் தொடர்பிலும் பேச்சு முன்னெடுக்கப்படும். அந்த வகையில் தீர்வை நோக்கிய பேச்சு தற்போதும் இடம்பெற்று வருகின்றன.

இது ஒரு நாளில் நிறைவடையும் பிரச்சினையல்ல. இந்தப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்காக இராஜதந்திர மட்டத்தில் உரிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்திருக்கின்றோம். ஆனால் இதற்கு தீர்வு என்ற ஒன்று இல்லை. இழுவைப் படகு முறைமை என்பது இலங்கையில் மாத்திரமின்றி இந்தியாவிலும் தடை செய்யப்பட்ட ஒரு மீன்பிடி முறைமையாகும். எனினும் அந்த முறைமையைப் பயன்படுத்தியே இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடிக்கின்றனர். சட்டதுடன் தொடர்புடைய தரப்புக்களின் ஊடாகவே கைதுகள், அதனையடுத்த சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனையும் வழங்கப்படுகிறது.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சு இந்த சம்பவம் தொடர்பில் எம்மிடம் நேரடியாகக் கேள்வியெழுப்பவில்லை. எனினும் டில்லியிலுள்ள பதில் உயர்ஆணையரை தமது அயலுறவுத்துறை அமைச்சுக்கு அழைத்து கண்டனம் தெரிவித்துள்ளது. அத்தோடு இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள இந்திய உயர்ஆணையமும் இது குறித்து அறிவித்துள்ளது என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலி ஹினிதும தேர்தல் தொகுதி ஐக்கிய தேசிய கட்சி அரசியல் சபை கூட்டம் நேற்று இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலே கதைத்து வருகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம் தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உத்தியோகபூர் வீடு தொடர்பில் பல்வேறு கதைகளை தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் இந்த விடயங்களை அரசாங்கம் வெளியில் தெரிவிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பின் 36 (2) உறுப்புரையில், யாராவது ஒருவரினால் ஜனாதிபதி பதவி ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கும் அதன் பின்னர் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறுவதற்கும் அந்த நபர் உரிமையுடையவராவார்.

பின்னர் இந்த அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் திருத்தம், இந்த அரசியலமைப்பு முழுமையாக நீக்கப்படுதல் அல்லது மறுசீரமைப்பு செய்தல் மற்றும் இந்த அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயம் ஒன்று பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு சட்டம் அல்லது சட்டத்தில் சில விதிமுறைகள் கடந்த காலத்துக்கு செல்லுபடியாகாது. அதாவது எந்த ஜனாதிபதியினதும் உரிமைகளை இல்லாமலாக்க முடியாது.

அதேபோன்று ஜனாதிபதி பதவியை வகிக்கும் நபர். சம்பளம் அல்லது கொடுப்பனவு ,ஓய்வூதிய கொடுப்பனவு உரித்துரிமைகளை பாராளுமன்ற பிரேரணை ஒன்றின் மூலம் அதிகரித்துக்கொள்ள முடியும்.

என்றாலும் அந்த சம்பள கொடுOப்பனவு ஓய்வூதிய உரித்துரிமைகளை குறைக்கக்கூடாது என்றே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த விடயங்களை சரியாக வாசித்திருந்தால் அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் காலத்தை வீணாக்க தேவை இருந்திருக்காது.

மேலும் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் 25 தடவைகள் வெளிநாடட்டு பயணம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்து வருகிறார்கள்.

அவர் நட்டை பொறுப்பேற்றுக்கொண்டு வீடடங்கி இருக்கவில்லை. அவர் நாட்டை பொறுப்பேற்று, நாட்டை கட்டியெழுப்ப முழு மூச்சுடன் செயற்பட்டு வந்தார்.

சர்வதேசத்துக்கு சென்று இந்த பிரச்சினைகளுக்கு தீர்வை தேடினார். அவர் செய்த அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியின் பெறுபேற்றினால்தான் வரிசைகளில் இருந்த மக்கள் வீடுகளுக்கு சென்றார்கள்.

அதனால்தான் வங்குராதே;து அடைந்திருந்த இந்த நட்டை ஒரு நிலைக்கு கொண்டுவந்திருக்கிறது. ஆனால் ரணில் விக்ரமசிங்க இந்த விடயங்களை வெளியில் வந்து சொல்லிக்கொண்டிருக்கவில்லை.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவருக்கான உள வள ஆலோசனைகள் தொடர்பான செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி அவர்களை நாட்டுக்கு நல்ல பிரஜைகளாக புடம் போடும்பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள, பணியாளர்கள் மற்றும் அதனோடு தொடர்புடையவர்களுக்கான 'பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயனுள்ள ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான அத்தியாவசிய திறன்கள் மற்றும் நெறிமுறைகள் செயலமர்வு' என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் நிலையத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எஃ.எம்.நிஜாம் தலைமையில் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு; நாட்டுக்கு நல்ல பிரஜைகளை உருவாக்கும் உயரிய பணியில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களின் பணிகளை பாராட்டியதுடன் எதிர்காலத்தில் மாணவர்களின் நன்னடத்தையில் மேலும் முன்னேற்றங்கள் இடம்பெற, சம்பந்தப்பட்டவர்கள் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் குறித்த விடயம் தொடர்பில் கடந்த காலங்களில் தான் கண்ட அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நிகழ்வுக்கு வளவாளர்களாக கலந்து கொண்ட முன்னாள் மாணவர் நலன்புரி சேவைகள் நிலையத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம், பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ். எம். ஜுனைடீன், சட்டம் மற்றும் ஆவணங்கள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளர் சட்டத்தரணி ஏ.ஆர்.எம். சுல்பி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.





# யாழ்.–இராவணா கிராமத்தில் சிறப்புற்ற பொங்கல் நிகழ்வு

(சுபேசன்)

யாழ்ப்பாணம் இராவணா கிராமத்தில் அண்மையில் பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம்,சுன்னாகம் ரோட்டராக்ட் கழகம்,சுன்னாகம் பாரம்பரிய ரோட்டராக்ட் கழகம்,யாழ்ப்பாணம் நகர் ரோட்டராக்ட் கழகம்,நொதேர்ன் ரோட்டராக்ட் கழகம்,கிளிநொச்சி நகர் மைய ரோட்டராக்ட் கழகம் மற்றும் கொக்குவில் இந்து கல்லூரி இடைவினைக் கழகம் ஆகியன இணைந்து பொங்கல் நிகழ்வை முன்னெடுத்திருந்தன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அபேபிட்டிய கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு அதிதிகளாக காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அத்துகோரல, சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக தெரிவுத் தலைவர் சிபோஜா மற்றும் ரோட்டரிக் மாவட்ட தெரிவுப் பிரதிநிதி தஸ்மி மஹமூத் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.





# மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தினால், தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

(கேதீஸ்)

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தினூடாக மஸ்கெலியா மவுசாக்கலை தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண பொருள்கள், உலர் உணவு பொருள்கள், மருந்து பொருள்கள், சமையல் பாத்திரங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் என்பன இலவசமாக வழங்கப்பட்டன.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிகமாக மஸ்கெலியா மவுசாக்கலை இலக்கம் 01 தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மன்றத்தின் தலைவர் ஏ.சிவஞானம் தலைமையிலான குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்ததுடன் அவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளையும் வழங்கியுள்ளனர்.





# கல்முனை வலய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும் அரசியல் பேரவை உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா கலந்து கொண்டு முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்களையும் முன்பள்ளி பாடவிதானம் தொடர்பாகவும் வழங்கி வைத்தார்.





காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விடைபெறுங்கள் மாவை

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் மூத்த தமிழ் தலைவருமான மாவை சேனாதிராசாவின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக இதயைத்தைத் தாக்கி நிற்கின்றது. அவரது இறுதிக் காலங்களில் அவரது தலைமைத்துவம் குறித்து கடுமையான விமர்சனங்கள் இருந்தபோதும், அவர் தமிழ் இனத்திற்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஆற்றிய அளப்பரிய பங்கு பணிகளை எவரும் எந்தக் காலத்திலும் நிராகரிக்கவோ, நிர்தாட்சணியமாக மறுக்கவோ முடியாதவை.

மாவை சேனாதிராசா ஒரு தசாப்தம். தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் இனத்தின் தந்தையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவருமான தந்தை செல்வாவின் நேரடி வழிப்படுத்தலில் வந்தவர். அவரது கடைசி வாரிசின் மறைவு என்று சொன்னால்கூடத் தகும். இன முரண்பாடுகள் தீவிரம் பெற்ற காலத்திற்கு முன்பான அரசியல், இனப் போர் தீவிரப் பெறத் தொடங்கிய – ஆயுதக் கலாசாரத்திற்குள் நுழைந்த அரசியல், ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்றிருந்த காலத்து அரசியல், ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான அரசியல் என்று தமிழ் இனத்தின் அனைத்து அரசியல் நகர்வுகளினதும் முழு முதற் சாட்சியாக இருந்த ஒரு தலைவரையே தமிழ் இனம் இன்று இழந்துள்ளது. பல அரசியல் களங்களும் சூழ்நிலைகளும் சேனாதிராசாவைப் புடம்போட்டு செழுமைப்படுத்தியிருந்தன என்பது பட்டவர்த்தனமான உண்மை. அதனால்தான் நெருக்கடியான சூழல்களில் அவரால் தமிழ் இனத்திற்கு தலைமைத்துவத்தை வழங்க முடிந்திருக்கிறது.

இயல்பில் மென்மையான போக்கையும் முரண்படாது எதனையும் ஆறப்போட்டு சமாளித்துச் செல்லும் பண்பையும் கட்சிக்குள் கடைபிடித்து வந்த அவர் எதிரிகளின் முன்பாக அரசியல் கர்ஜனை புரியும் ஒருவராகவே தன்னை நிலை நிறுத்தி வந்திருக்கிறார். தந்தை செல்வாவின் வடக்கு கிழக்கு தாயகம், தமிழர்களின்தன்னாட்சிஉரிமை, இறைமைஎன்பவற்றை தனது கடைசி மூச்சு வரை விட்டுக்கொடுக்காது போராடியவர் மாவை.

கடந்த சில காலங்களாகவே தமிழ் மக்களின் இன நலன்களுக்காகப் பாடுபட்ட தலைவர்கள், தம்மை அர்ப்பணித்த தலைவர்களுக்கு உரிய மரியாதை செலுத்தப்படவில்லை என்கிற கவலையும் அக்கறையும் அரசியல் பரப்பில் நிறையவே உள்ளது. மாவை சேனாதிராசாவிடயத்திலும்அப்படிநிகழ்ந்துவிடக்கூடாது. மாவை வடக்கு மக்களின் தலைவராக மட்டுமல்ல கிழக்கு மக்களின் விருப்பத்திற்குரிய தலைவராகவும் இருந்தவர். அம்பாறை மாவட்டத்தில் அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்துக் கொண்டாடும் அபிமானிகள் இன்னமும் இருக்கிறார்கள். அத்தகைய தலைவருக்கு உரிய அரசியல் மரியாதைகளுடன் அவர் வழியனுப்பி வைக்கப்படவேண்டும்.

நீங்கள் விடைபெறுங்கள் மாவை. உங்கள் கனவை அடையும்வரை தமிழர்கள் தைத் தமது தோள்களில் சுமப்பார்கள்.

# மாவை என்னும் தலைவரின்

## அரசியல் வரலாற்றுப் பாதை



சோமசுந்தரம் சேனாதிராசா என்ற இயற்பெயர் கொண்ட இளைஞர் தனது அரசியல் செயற்பாடுகளின் மூலம் மாவை சோ.சேனாதிராசாவாக வளர்ந்த அரசியல் வரலாற்றை இந்தத் தருணத்தில் திரும்பிப் பார்ப்பது பொருத்தமானது.

அவரின் சொந்த ஊர் மாவிட்டபுரம் என்பதால் ஊரின் பெயருடன் சேர்த்து மாவை சேனாதிராசா என அழைக்கப்பட்டார். அதன் சுருக்கமான மாவை என்பதும் அவரையே குறிக்கும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வடக்குப் பகுதியான, மாவிட்டபுரத்தில் 1942 ஒக்டோபர் 27 பிறந்தார். வீமன்காமம் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், நடேஸ்வராக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் பெற்றார், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் ஈடுபாடு காட்டிய அவர் தந்தை செல்வாவின் அரசியலால் ஈர்க்கப்பட்டார். 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தந்தை செல்வாவுடன் பங்குபற்றினார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியில் 1962இல் இணைந்தார். 1966 முதல் 1969 வரை ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகவும் பணியாற்றினார்.

1969க்கும் 1983க்கும் இடைப்பட்ட காலத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைப்பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு, வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகளில் மொத்தம் ஏழாண்டுகள் அடைக்கப்பட்டிருந்தார். 1977இல் மாவை சேனாதிராசா திருமண உறவில் இணைந்தார். பவானி என்பவரை இல்லறத் துணையாகக் கொண்டார். அவர்களுக்கு இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணுமாக மூன்று பிள்ளைகள் பிறந்தனர்.

1972இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டார். 1989 நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகிய கட்சிகளுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிட்டார். ஆனால் வெற்றிபெறவில்லை.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989 ஜூலை 13இல் படுகொலை செய்யப்பட்டமையை அடுத்து அவரின் இடத்துக்கு மாவை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வடக்கு கிழக்கு இணைப்பின் தேவை கருதி, அப்போது சிங்கள ஆக்கிரமிப்பினால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்த அம்பாறைக்கே அவர் பயன்படுத்தினார்.

பலருக்கு அம்பாறை மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி, துறைமுக அதிகாரசபை நியமனங்களைப் பெற்றுக்கொடுத்தார். பன்முகப்படுத்தப்பட் நிதியை அம்பாறை மாவட்டத் தமிழ் கிராமங்களுக்கே ஒதுக்கினார். பெரியநீலாவணை வைத்தியசாலையில் இவருடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் கட்டடம் அமைக்கப்பட்டது.

1994 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி மூலமாகத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவர் தெரிவாகவில்லை. 1999 ஜூலை 29இல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றார்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். 2001 ஒக்டோபர் 20 தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஆகிய நான்கு கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிறுவின. அதிலும் முக்கிய பங்கு வகித்தார்.

2001 தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். மாவை விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் ஆனந்த சங்கரி கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றதுடன், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அதன் உதயசூரியன் சின்னத்தையும் தனதாக்கிக் கொண்டபோது, அதுவரையில் முடக்கி வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசுக் கட்சியை மீளப் புதுப்பித்து தமிழர்களின் இன அரசியலை முன்னெடுப்பதற்கான புதிய பாதையை மாவை திறந்துவிட்டார். அன்று முதல் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னமே தமிழ் மக்களின் அரசியல் அடையாளமாக மாறியது.

2004, 2010, 2015, தேர்தல்களில் மீண்டும் தமிழ் அரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார். 2020 தேர்தலில் போட்டியிட்டும் 29 ஆயிரத்து 358 வாக்குகளைப் பெற்றும் அவர் தெரிவாகவில்லை.

தமிழ் அரசுக்கட்சி பொதுச்செயலாளராக 2004 தொடக்கம் 2014 வரையும் பதவி வகித்தார். 2014இல் சம்பந்தருக்குப் பின்னர் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றார். தமிழரசுக் கட்சி யின் 15 ஆவது தேசிய மாநாட்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பதவியேற்றார்.

அவரது தலைமைப் பதவி குறித்து விமர்சனங்கள் எழுந்தபோது அந்துப் பதவியை அடுத்தவரிடம் வழங்க முன்வந்தார். 2024 தை மாதம் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடந்த கட்சியின் பொதுக்குழுக்கூட்டத்தில் அவர் தலைமைப் பதவியைக் கையளிக்க முன்வந்தபோதும், அங்கு ஏற்பட்ட குழுப்பத்தாலும் அதன் பின்னர் ஏற்பட்ட சூழல்களாலும் கட்சித் தலைவர் பதவியில் தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

2024 நவம்பர் பொதுத்தேர்தலின்போது கட்சியின் வேட்பாளர் தெரிவு விடயத்தில் தனது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படவில்லை என்று கோபத்தில் தலைவர் பதவியில் இருந்து தான் விலகுகின்றார் என அறிவித்தார். கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் 2024 டிசம்பர் 28 இல் வவுனியாவில் இடம்பெற்றபோது அவரது பதவி விலகலை ஏற்றுக்கொண்ட கட்சி, பதில் தலைவர் சிவஞானத்தைத் தெரிவு செய்தது. மாவைக்கு அரசியல் குழு தலைவர் பதவி வழங்கப்பட்டது. அவருக்குக் கட்சியின் பெருந் தலைவர் என்ற பதவியை வழங்க முயன்றபோது கட்சி யாப்புக்கு முரணானது என்ற காரணத்தை முன்வைத்துத் தட்டிக்கழிக்கப்பட்டது. எனினும் தமிழ் மக்களின் மனங்களில் அவர் என்றும் ஒரு பெருந் தலைவராகவே வாழ்ந்துள்ளார்.

# பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் இறுதிச் சுற்றுப் போட்டி

(சகா தேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் 'பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி'யின் அரையிறுதி மற்றும் இறுதி போட்டி நிகழ்வுகள் செவ்வாய்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா யுலேக்கா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்

சிறப்பு அதிதிகளாக கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி லோகினி விவேகானந்தராஜா மற்றும் கோறளைப்பற்று வடக்கு கணக்காளர் சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 10 பிரதேசசெயலகங்கள் இந்தசுற்றுப்போட்டியில் பங்குபற்றியதோடு அரையிறுதி போட்டிக்கு கோறளைப்பற்று, மண்முனை தென் எருவில்பற்று, கோறளைப்பற்று தெற்கு (கிரான்) மற்றும் கோறளைப்பற்று வடக்கு (வாகரை) ஆகிய பிரதேச செயலகங்கள் முன்னேறின.

இறுதிப்போட்டியில் கோறளைப்பற்று தெற்கு (கிரான்) மற்றும் கோறளைப்பற்று வடக்கு (வாகரை) ஆகிய பிரதேசசெயலகங்கள் போட்டியிட்டதுடன், கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகம், 2025 ஆம் ஆண்டின் பிரதேச செயலாளர் கிண்ணத்தை சுவீகரித்தது.





மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் 3 ஆம் இடத்தினையும், கோறளைப்பற்று பிரதேச செயலகம் 4 ஆம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

வெற்றியீட்டிய அணிகளுக்கான கிண்ணங்கள் மற்றும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், தொடரின் சிறந்த ஆட்டநாயகன் மற்றும் இறுதிப்போட்டியில் ஆட்டநாயகன் போன்ற விருதுகளும், பங்கேற்ற அனைத்து அணிகளுக்குமான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மலராஜ் , நிருவாக உத்தியோகத்தர் வே. தேவேந்திரன் , பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பெரியகல்லாறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# ஆளும் தரப்பு அறிவிப்பு சட்டத்திற்கு முரணானது!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போர்க்கொடி

(நூருல் ஹுதா உமர்)


ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அறிவித்தது ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடக அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் -

தற்பொழுது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் விஷேட சட்ட மூலம் அடிப்படையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனு பெறப்படும் திகதி அறிவிக்கும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அவர்களுக்கு கீழ் இயங்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதத்துக்குள் உள்ள ஒரு திகதியாக வேண்டும்.

ஆகவே தேர்தல் ஆணைக்குழு சகல அரசியல் கட்சி செயலாளர்களை அழைத்து கலந்தாலோசித்த பிற்பாடு திகதி அறிவிக்கப்பட வேண்டும். அரசாங்கத்துக்கோ அல்லது கட்சிக்கோ சாதகமாக திகதியை தீர்மானிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாக நாங்கள் கருதுகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.





காலைக்கதிர் Kalaikkathir

# கையினால் நெல்லை அறுவடைசெய்யும் கிளிநொச்சி விவசாயிகளின் பரிதாபம்

என்றும்இல்லாதவாறுஇம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் வயல்கள் வெள்ள அனர்த்தங்களினால் அழிவடைந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பெருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடை இயந்திரம்கொண்டு அறுவடை செய்ய முடியாத நிலையில் தொடர்ச்சியாக வெள்ள நிலமை காரணமாக தமது உணவுத்தேவைக்காவது அரிசியை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் கையினால் நெல் அறுவடை செய்து வருகின்றனர்.

அத்துடன் தமது தோள்களிலே சுமந்து அறுவடை செய்த நெல்லினை வீதிகளில் உலர வைத்த பின்னரே நெல்லினை பயன்படுத்த முடியும் எனவும் அத்துடன் தேறிய முழுமையான நெல்லாக இல்லை எனவும் தெரிவித்தனர். 113









# இரத்தினபுரியில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன

9கேதீஸ்)

மலையகத்தில் பல்வேறு சமூக சேவைகளை முன்னெடுத்து வரும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும் தலைவருமான ரமேஷின் பிறந்தநாளையொட்டி மாவட்ட ரீதியில் பல இடங்களில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

அத்துடன் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினூடாக மலையக யுவதிகளுக்காக ஸ்தாபிக்கப்பட்ட சுருமு ஆடைத்தொழிற்சாலை ஓராண்டு பூர்த்தியையொட்டி அன்றைய தினம் கேக் வெட்டி கொண்டாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# மெய்வன்மைப் போட்டி

கிண்ணியா அல் மினா மஹா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியின் பெண்களுக்கான எல்ல விளையாட்டு போட்டி நேற்று இடம்பெற்றது.

பக்தாத்,குறுத்துபா ஆகிய இல்லங்களுக்கு இடையில் நடைபெற்ற இப்போட்டி பாடசாலையில் பிரதி அதிபர் எம்.ஏ. சி. இம்தியாஸ் தலைமையில் கீழ் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் உதவி அதிபர் ஏ.எஸ். எம்.பளீல் விளையாட்டு பொறுப்பாசிரியர் ஏ எச்.எம் நவாஸ், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.ஷன்பாஷ், இவர்களுடன் ஏ.சி. நசுருள்ளாஹ்,எச் எம் ஹலால்தீன், எஸ் எம்.நளீர், ஆசிரியர்களுடன் ஆசிரியைகளும் கலந்து கொண்டனர்.

அஸ் ஸபா மகா வித்யாலயா விளையாட்டு ஆசிரியரான, எம். ஆர்.எம்.மபாஸ், விளையாட்டு பயிற்றுவிப்பாளரான, எம்.எம்.றிஸ்நாத், எஸ். சந்தோஷ் (ஆலங்கேணி விநாயகர் வித்தியாலயம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.






# திருமலை சித்த வைத்தியசாலையில் 'கிளீன் சிறிலங்கா' முன்னெடுப்பு!

(அபு அலா)

'கிளீன் சிறிங்கா' வேலைத்திட்டத்திற்கு அமைவாக திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் சிரமதானப் பணி நேற்று(புதன்கிழமை) இடம்பெற்றது.

வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்துப் பணியில் வைத்திய



கலாநிதி எஸ்.ஆர்.போல்டன் ரஜீவ், வைத்தியர் பீ.ராஜவதனா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் இப்பணியில் ஈடுபட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சுதந்திர தினத்தை கரிநாளாக அனுசரிக்க அறைகூவல் விடுப்பு

## பி2பி மக்கள் பேரெழுச்சி இயக்கம் அழைப்பு

சிறிலங்கா அரசின் சுமந்திர நாளைத் தமிழ் தாயகம் எங்கும் கரிநாளாக அனுஷ்டிக்குமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் மக்கள் பேரெழுச்சி அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர்களான அருட்பணி. து. ஜோசப்மேரி மற்றும் வேலன்சுவாமிகள் ஆகியோர் ஒப்பமிட்டு ஊடக அறிக்கை விடுத்துள்ளனர்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 4 ஆம் திகதியை சிறிலங்கா தேசம் தமது சுதந்திர தினமாக கொண்டாடி வருகின்றது. ஆயினும் அன்றைய தினமே பறிக்கப்பட்ட தமிழர் தேசத்தின் இறையாண்மை, ஆங்கிலேயரிடமிருந்து சிங்கள பேரினவாதிகளுக்கு கைம்மாற்றப்பட்ட தினமாகும். வரலாற்றுரீதியாக இலங்கைத்தீவின் வடக்குகிழக்கு பகுதிகள் ஒன்றிணைந்த பகுதிகள், இத்தீவின் மூத்த குடிகளான தமிழ் மக்களின் தாயக பூமியாக இருந்தது என்பதையும், அந்த தாயகபூமி இறையாண்மை உள்ள தனித்தேசமாக இருந்தது என்ற வரலாற்று உண்மையை மறுதலித்து எமது சுதந்திரம் சிங்கள தேசத்திடம் கையகப்படுத்தப்பட்ட நாளாகவே இந்நாள் உள்ளது.

இன்று தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி ஏறி உள்ள ஜனதா விமுத்தி பெரமுன (ஜேவிபி) எனும் சிங்கள அடிப்படைவாத கட்சி தம்மை மாற்றத்தின் நாயகர்களாக காட்டி முற்பட்டாலும் அவர்களின் உண்மை முகம் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டே இருக்கின்றது.

என்றுமில்லாதவாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி ஏறியவர்கள் இலங்கைத் தீவின் அதி உச்ச பிரச்சினையான தமிழ் மக்களின் இனப்பிரச்சனை தொடர்பாக எவ்வித அக்கறைகளுமின்றி, ஏன் அவ்வாறான ஒருபிரச்சனையே இல்லை என்ற கோதாவிலேயே நடந்து வருகின்றனர்.

அத்துடன் சிங்கள பேரினவாதத்தால் இனத்தின் மீதான இனவழிப்பினை மறுதலித்து, அலட்சியத்துடன் வலிந்து காணமல் ஆக்கப்பட்ட அனைவரும் இறந்து விட்டதாக கூறுகின்றனர். அரசியல் கைதிகள் யாரும் இல்லை என முன்னைய அரசாங்கங்களைப் போலவே தமிழ் மக்களின் போராட்டத்தினை பயங்கரவாதமாகவே சித்திரிக்க முயல்கின்றனர்.

சிங்கள தேசத்தில் ஆட்சி மாறினாலும், சிங்கள பேரினவாத மூலோபாயம் மாறாது என்பதே நாம் கண்ட அனுபவபாடம். அதைவிடுத்து இந்த ஆட்சியில் தீர்வு கிடைக்கும் என நம்புவோமேயானால் எம்மை போன்ற அரசியல் அறிவிலிகள் யாரும் இருக்க முடியாது.

மேலும், இந்த அரசானது இலங்கையர் எனும் அடையாளத்தின் கீழ் தமிழ் மக்களின் தனித்துவத்தை அழித்து சிங்கள மேலாண்மையை நிறுவுவதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

மேற்கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு வரும் சிறிலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தை தொடர்ச்சியாக தமிழர் தேசம் கரிநாளாக அனுசரித்தது போலவே இம்முறையும் அனுசரிக்க அறைகூவல் விடுக்கின்றோம்.

சிங்கள தேசம் தமது சுதந்திர தினத்தை கொண்டாடும் அதே நாளை நாம் சுதந்திரத்தினை இழந்த நாளாக கருத்தில் கொண்டு பொதுவிடங்கள், கடைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், வணக்கத்தலங்கள், எமது வீடுகள் என்பவற்றில் கறுப்பு கொடிகளை கட்டி உங்களின் எதிர்ப்பினை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்நாளில் உங்களின் உரிமைக் குரலுடன் சிங்கள அரசுக்கெதிரான தன்னெழுச்சியான போராட்டங்களை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழர் தேசம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இறையாண்மை உள்ள தனித்தேசமாக மலரும் நாளே தமிழினத்தின் சுதந்திர நாள் என்பதனை மனதில் கொண்டு விடுதலைக்காய் போராட அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். - என்றுள்ளது.



## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் இன்றைக்கும் இந்த நாட்டை பாதுகாக்க முடியுமான தேசிய தலைவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமாகும் என்றார்.

## போராட்டங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸாநாயக்க மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம், பொதுமக்கள் சந்திப்பு என சில நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நாளை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையின்போது போராட்டம் நடத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா இராமநாதன், வட மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கம் உள்ளிட்டவை அழைப்பு விடுத்திருந்தன.

இந்நிலையில், போராட்டம் நடத்துவதை தடைசெய்யக்கோரியாழ்ப்பாணம்பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம் மனுத்தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து,நாடாளுமன்றஉறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் உட்பட ஐவரை இன்றைய தினம் வியாழக்கிழமை (30) நீதிமன்றத்தில் முன்னிலையாகி தமது தரப்பு விளக்கத்தை வழங்க அழைப்புக் கட்டளை அனுப்ப யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## பதவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டது.

பல்கலைக்கழகமாணவர்களின்தவறுகள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைச் சபை முன்வைத்த பரிந்துரைப்படி தண்டனை வழங்கப்படுவதாக துணைவேந்தர் திங்கட்கிழமையே அறிவித்திருந்தார். மாணவர்களுக்கும் தண்டனை தொடர்பான கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் பேரவையின்அனுமதிஇன்றிதுணைவேந்தர் இந்த நடவடிக்கையில் ஈடுபடுவது நிர்வாக குறைபாடுகளைக் குறிப்பதாக அமையும் என்று சுட்டிக்காட்டிய யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், துணைவேந்தரின் முடிவை அங்கீகரிக்க பேரவையைக் கூட்டும்படி கோரிக்கை விடுத்தது.

அதனடிப்படையில் நேற்றுக் கூட்டப்பட்ட பேரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் காரசாரமான விவாதத்தைக் கிளப்பியது. மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையில் அவர்களை எச்சரித்து, அவர்கள் மீதான வகுப்புத் தடையை நீக்குவது என்ற முடிவு பேரவைக் கூட்டத்தில் ஏகமனதாகத்தானே எடுக்கப்பட்டது என்று வெளிவாரி உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுக் கேள்வி எழுப்பப்பட்டது. சூம் வழியாகக் கூட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் நீதிபதி சிறீநிதி இந்தக் கேள்வியை எழுப்பினார். அதற்கு கல்விசார் சமூகத்தின் சார்பில் அதற்கான எதிர்ப்புப் பதிவு செய்யப்பட்டதாகவும்அதனைதுணைவேந்தர் சரிவரக் கவனத்தில்கொள்ளவில்லை என்றும் பதிலளிக்கப்பட்டது. எனவே அந்த முடிவு ஏகமனதான முடிவாகப் பிரதிபலிக்கப்படமுடியாதது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட சர்ச்சைகள், கருத்துமேதல்கள், விவாதங்களின் பின்னர் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கையை ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைப்படியே தொடர்வது என்று பேரவை முடிவு செய்தது. இந்தக் கூட்டத்தில், சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் மேலும் ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார். தான் பதவி விலகினார் என்று அறிவித்த கலைப்பீடாதிபதி ரகுராம் அதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துறைசார் கூட்டம் ஒன்றில் பதவி நிலைப்படி எப்படிக் கலந்துகொண்டார் என்று அவர் கேள்வி எழுப்பினார்? இதனால் அங்கு சர்ச்சை எழுந்தது.

பீடாதிபதி பதவியில் இருந்து விலகிய போதும் ஒரு பேராசிரியர் என்று ரீதியில் அவர் அதில் பங்கேற்றிருக்கக்கூடும் என்கிற வகையில் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது. எனினும் சமூகத்தில் தனக்குச் சார்பாகக் கருத்துருவாக்கம் செய்ய முனையும் அவர் தனது செயற்பாடுகள் குறித்து அவதானமாக இருக்கவேண்டியதன் அவசியத்தையும் சட்டத்தரணி அங்கு சுட்டிக்காட்டினார்.

## அருச்சுனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமைகளுக்கு இடையூறு விளைவித்து, அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்று அருச்சுனாமீதுகுற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான வழக்குக்காக அவர் அநுராதபுரம் நீதிமன்றம் சென்றிருந்தபோது அவரது பெயரில் எந்த வழக்கும் இல்லை என்று தெரிவித்திருந்தார் நீதிவான். அநுராதபுரம் பொலிஸார்அவரதுபெயரைமாற்றிஎழுதியதன் விளைவாக இவ்வாறு நிகழ்ந்தது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனை சந்தேகநபராக ஏற்க மறுத்த அநுராதபுர நீதிமன்றம், தண்டனைச் சட்டக்கோவை, மோட்டார்வாகனசட்டவிதிகளுக்குமுரணாகச் செயற்பட்டுபொலிஸ்கடமைகளுக்குஇடையூறு விளைவித்து பொலிஸாரை அச்சுறுத்தியமை உள்ளிட்டகுற்றச்சாட்டுகளுக்காகநாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சட்ட ரீதியாக செயற்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிறப்பித்த உத்தரவுக்கு அமைய நேற்று சாவகச்சேரிக்கு வந்த பொலிஸார் அதே குற்றச்சாட்டுக்காக அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

## தேங்காய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரும் இதற்கான ஒரு குழுவை அமைத்துள்ளனர்.

அதன்படி, குழுவின் ஒப்புதலின்படி அடிப்படையில் தேங்காய் இறக்குமதி செய்யப்படும்.

இது தொடர்பாக, பெருந்தோட்ட மற்றும் சமூகஉள்கட்டமைப்புஅமைச்சு, கைத்தொழில் அமைச்சு, தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை சாகுபடி திணைக்களம், தென்னை மேம்பாட்டு அதிகாரசபை மற்றும் இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து அண்மையில் கைத்தொழில்அமைச்சில்ஒருகலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளது.

# 30 ஆண்டுகளாக சிறையில் வாடும் அண்ணனை விடுவித்து தாருங்கள்

### ஜனாதிபதியிடம் தங்கை உருக்கமான கோரிக்கை

30 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் அரசியல் கைதியான எனது அண்ணனை விடுவியுங்கள் என பார்த்திபனின் சகோதரி வாகினி ஜனாதிபதி அனுரவிடம் உருக்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எங்களுடைய அண்ணாவிற்கு விடுதலை கிடைத்துவிடும் என்று கடந்த 30 ஆண்டுகளாக நாங்கள் பல ஜனாதிபதிகளிடம் முறையிட்டும் எந்த விதமான தீர்வுகளும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. தற்போதய ஜனாதிபதி அனுர யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவருக்கும் கடிதம் கொடுத்துள்ளேன்.

அதற்கான பதில், கடிதம் கிடைத்தது என்று மாத்திரமே வந்தது. ஜனாதிபதி அனுர நாளை யாழ்ப்பாணம் வருகின்றார். அன்றைய தினம் எனது அண்ணா கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றது.

கடந்த 30 ஆண்டுகளாக எங்களுடைய அண்ணாவுக்கும் மன்னிப்பு கிடைக்கவில்லை. இந்த முறை சுதந்திர தினத்தில் என்றாலும் அவரை விடுதலைசெய்து அண்ணாவை எங்களுடன் சுதந்திரமாக வாழவிடுங்கள். நாங்கள் எங்களுடைய குடும்பம் சார்பில் உங்களைக் கும்பிட்டு கேட்கின்றோம். நீங்கள் என்றாலும் என்னுடைய அண்ணாக்கு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யுங்கள்.

30 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து எங்களுடைய அண்ணாவுக்கு தற்போது 50 வயதாக போன்றது. இனியும் அவரை சிறையில் வைத்து இருக்காதீர்கள், சிறையில் வைத்திருந்து என்ன செய்யப் போகிறீர்கள். எங்களுடைய அண்ணா விடுவிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்புடன் எங்களுடைய குடும்பம் காத்திருக்கின்றது. நான் இறுதியாக ஜனாதிபதி அனுரவின கூட்டத்தில் கலந்து கொண்டபோதும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார். அதை நம்பியே நாங்களும் இருக்கின்றோம்.

நீங்கள் கூறியதை நிறைவேற்றுவீர்கள் என நாங்கள் உங்களை நம்பியிருக்கின்றோம். கடந்த காலங்களில் வந்த ஜனாதிபதிகள் எவரும் நமக்கான நீதியைப் பெற்றுத்தரவில்லை. நீங்கள் இந்த சுதந்திர தினத்தில் பொது மன்னிப்பளித்து எங்களுடைய அண்ணாவிற்கு சுதந்திரத்தினை கொடுங்கள் என்று நாங்கள் உங்களை மன்றாடிக் கேட்கின்றோம் என்றார்.






# மந்துவில் கிராமத்தில் தேவையுடைய குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்

(சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தால் மந்துவில் மேற்கு கிராமத்தில் தேவைப்பாடுடைய குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

எலிபன்ற் எயிட் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச தொழு நோயாளர் தினத்தை முன்னிட்டு நடமாடும் மருத்துவ முகாம், விழிப்புணர்வு நிகழ்வு

## வளத்தாப்பிட்டியில் நடந்தது

(இல்சாத் பர்வீஸ்)

சர்வதேச தொழு நோய் தினத்தை முன்னிட்டு, திங்கட்கிழமை நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வுநிகழ்வும்டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் வளத்தாப்பிட்டி, கிறேஸ் பாலர் பாடசாலைக் கட்டடத்தில் நடைபெற்றது.

மாத்திரைகளை உட்கொள்ளும் பட்சத்தில் ஒரு வருடத்திற்குள் தொழு நோயை முற்றாக குணமாகிவிடும். அத்துடன், தொழுநோய் தினம், வருடம் தோறும் டிசெம்பர் மாதம் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் அனுஸ்டிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்ட பிராந்தியத்தில் அதிக தொழு நோயாளர்கள் சம்மாந்துறைசுகாதாரவைத்தியஅதிகாரி பிரிவிலேயே இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு, பிராந்திய தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஏ. சி. எம். பஸால், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தோல் நோய் பிரிவு வைத்தியர் டாக்டர். உனைசியா மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பொது மருத்துவ மாதுக்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளுக்கு, அலையன்ஸ் டெவலப்மெண்ட் டிரஸ் அனுசரனை வழங்கியது சிறப்பம்சமாகும்.





# செலவு அறிக்கை தரத் தவறிய 9 கட்சிகள், 17 வேட்பாளர்கள் மீது திருகோணமலையில் நடவடிக்கை

(ஹஸ்பர்)

2024 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பொதுத்தேர்தலில்போட்டியிட்ட கட்சிகள், சுயேச்சை குழுக்களின் அபேட்சகர்கள் 17 பேருக்கும் மற்றும் கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சை குழுக்களின் தலைவர்கள் 9 பேருக்கும் எதிராக செவ்வாய்க்கிழமை மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினரால் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி முகம்மது சுல்தான் நஜீம் தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கையானது தேர்தல் திணைக்களத்தின் சட்டத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் கட்டளைக்கு அமைவாக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கான பிரியாவிடையும் கடமையேற்பு நிகழ்வும்

(றமீஸ்)



அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற்கல்லூரியில்சேவையாற்றிய பீடாதிபதிக்கான பிரியாவிடை நிகழ்வும், புதிதாக பதவியேற்கும் பீடாதிபதிக்கான பதவியேற்பு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி தனது 40 வருட அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவருக்கான பிரியாவிடை நிகழ்வு விரிவுரையாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் தொடருறு கல்விப்பிரிவின் விரிவுரை இணைப்பாளருமான ஏ.எஸ். எம். சதாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது புதிய பீடாதிபதி எம். சி. ஜுனைடிட், தொடருறு கல்விப்பிரிவின் உபபீடாதிபதி எம்.ஐ.ஜஃபர், கல்விப்பிரிவின் உபபீடாதிபதி ஏஜீ. அஹமட் நளீர் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், ஆசிரிய பயிலுனர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெறும் பீடாதிபதி கடந்த காலத்தில் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக்கல்விப் பணிப்பாளராகவும், உப பீடாதிபதியாகவும், சட்டத்தரணியாகவும் பல்வேறு பதவிகளில் இருந்து நல்ல பல சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆறாவது பீடாதிபதியாக எம்.சி.ஜுனைட் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட நியமன கடிதத்தின் பிரகாரம் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் நிதி மற்றும் நிருவாகத்திற்கான உப பீடாதிபதியாக இவர் கடமையாற்றியதுடன், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதியாகவும், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முன்னாள் அதிபராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நிந்தவூரை சேர்ந்த அரசறிவியல் ஆசிரியருக்கு ‘சிறந்த மனித உரிமை செயற்பாட்டாளர்’ விருது

(பர்வீஸ்)

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மக்கள் பாதுகாப்பு அமைப்பால் 'மனிதாபிமான விருது' திட்டத்தின் கீழ் இந்த விருது வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாடு, சட்டம் ஆலோசனை உதவிகள், கலை, இலக்கியம், ஊடகம், கல்வி, சமூக சேவை, பொருளாதார நல திட்டங்கள், ஆகிய துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பங்காற்றியவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் 'சிறந்த மனித உரிமை செயற்பாட்டாளர்' விருதினை நிந்தவூறை பிறப்பிடமாகக்கொண்ட கிழக்குமாகானத்தில் பிரபல அரசறிவியல் ஆசிரியர் சபீர் ஹமீட் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர்ரஹ்மான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மரைக்கார் அவர்களின் அங்கீகாரத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர்ரஹ்மானின் கரங்களால் பெற்றுக்கொண்டார்.

இவர் அகில இலங்கை சமாதான நீதிவானும் ,நிந்தவூர் காஷிபுலிலும் அரபுக் கல்லூரியில் மௌலவி பட்டம் பெற்ற சபீர் ஹமீட், இலங்கை சட்டக் கல்லூரி, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வி பயின்றுள்ளார். சட்டம், அரசியல், அறிவியல், மனித உரிமைகள், சமாதானக் கல்வி மற்றும் கல்வித்துறை ஆகிய துறைகளில் அவர் தனது கல்வித் தகுதியை மேம்படுத்திக்கொண்டார்.

மேலும், ஐபிஎம் ஜேர்மனி நிறுவனத்தில் சர்வதேச அரசியல் மற்றும் மனித வள மேலாண்மை ஆகிய துறைகளில் உயர் சான்றிதழ்களைப் பெற்றுள்ளார்.

சபீர் ஹமீட் அவர்கள் தனது கல்வித் திறமைகளை சமூக சேவையில் பயன்படுத்தி வருகிறார்.

நிந்தவூர் முத்தக்கீன் விளையாட்டு கழகத்தின் தலைவரும், நிந்தவூர் அனைத்து விளையாட்டு கழக சம்மேளனத்தின் முன்னாள் செயலாளரும், நிந்தவூர் அல் பர்ஹான் சனசமூக நிர்வாக உறுப்பினராகவும் செயற்படுகிறார்.

மேலும், பல்வேறு மனித உரிமைகள் சார்ந்த சமூக அமைப்புகளில் தீவிரமாக பங்களித்து வருகிறார்.

மனிதநேய சேவைக்கான அங்கீகாரம் சபீர் ஹமீடின் பன்முகத் திறமைகள் மற்றும் சமூக சேவைகளுக்காக இன்று அவர் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் செவ்வாய் நடந்தது

நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எல். லத்தீப் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. அஷ்ரப் தாஹிர், எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் திணைக்கள தலைவர்கள், பிரதேச அமைப்புக்களின் தலைவர்களும் கலந்து கொண்டு தங்களது ஆக்க பூர்வமான கருத்துக்களையும் முன்வைத்தனர்.

இறுதியாக நிந்தவூர் பிரதேச எல்லைக்குட்பட்ட சிறந்த திட்டங்களை மக்களின் தேவை கருதி நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஏ.ஆதம்பாவா அவர்கள் பிரதேச செயலாளருக்கும், உரிய திணைக்கள தலைவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

மேலும் சில செயற்திட்டங்களை மக்களுக்காக உரிய அமைச்சுகளூடாக இப்பிரதேசத்திற்கு கொண்டுவருவதாகவும் சபையில் தெரிவித்தார்.







காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூட்டம் சட்டவிரோதம்

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என எச்சரிக்கை

நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு முரணாக இவர்கள் செயற்பட்டிருப்பதால் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான ஒரு விண்ணப்பத்தினை செய்யுமாறு நீதிமன்றம் எங்களிற்கு அறிவுரை வழங்கி இருக்கின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணி மீதான வழக்கு தொடர்ந்த மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கனகசபை ரவீந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் மார்ச் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூட்டம் சட்ட ரீதியற்றது என தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்களான சுதாகரன் மற்றும் சூ.சூரியபிரபாவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இந்த வழக்கானது வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. கடந்த முறை எதிர்த்தரப்பினராகிய வீ.ஆனந்தசங்கரி உட்பட ஏனையோர் சார்பாக தோன்றிய சட்டத்தரணி வழக்காளிகளால் கோரப்பட்ட நிவாரணங்களை வழங்குவதில் தங்களுக்கு எவ்விதமான ஆட்சேபனைகளும் இல்லை என்று தெரிவித்திருந்தார்கள். அத்தோடு இவ்வழக்கை சமாதானமாக தீர்த்துக்கொள்ள வேறு ஒரு தினத்தையும் கேட்டிருந்தார்.

மேலும், சமாதனத்திற்காக கோரியிருந்தாலும்கூட, சமாதானத்திற்கு முன்னரான தினமே இன்னுமொரு சட்ட விரோத கூட்டத்தினை கூட்டி அதில் சில தீர்மாணங்களை எடுத்ததுடன்,சிலஉறுப்பினர்களையும் கட்சியிலே சேர்த்திருந்தனர். குறித்த நடவடிக்கையும்சட்டவிரோதமானது. ஏன்எனின், நீதிமன்றத்தால் இடைக்கால கட்டளை வழங்கப்பட்டிருந்த போதும் அதனை மீறி தமிழர் விடுதலைக் கூட்டணியின்எதிராளிகளால்குறித்த கூட்டம் நடத்தப்பட்டிருந்தது.

குறித்த கூட்டத்திலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் சட்டவிரோதமானவை எனக் கோரி அதனையும் இரத்துச் செய்யக்கோரி நீதிமன்றத்தில் கேட்டிருந்தோம். நீதிமன்றமானது ஏற்கனவே வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைக்கு எதிரான வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் செயற்பட்டமையால் குறித்த கட்சியின் பொதுச்சபை கூட்டமானது, சட்டரீதியற்றது என்றும், இங்கே நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு முரணாக இவர்கள் செயற்பட்டிருப்பதால் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான ஒரு விண்ணப்பத்தினை செய்யுமாறு நீதிமன்றம் எங்களிற்கு அறிவுரை வழங்கி இருக்கின்றது. மீண்டும் இவ்வழக்கானது விசாரணைக்காக ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.





இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களான மனுதாரர்கள் சார்பாக சட்டத் தரணி கனகசபை ரவீந்திரன் மற்றும் கீர்த்தனன் ரவீந்திரநாதன் முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2025இல் வெளியிடப்பெற்றது